11-55 மணி

4. விதி 111-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை.

வேளாண்மைத் துறை அமைச்சர் 21–4–1990 ஆம் நாளன்று ஆற்றிய உரையில் திருத்தம்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 111-ன்கீழ் கீழக்கண்ட அறிக்கையைப் படிக்கிறேன் :

''21–4–1990 ஆம் நாள் அன்று நடைபெற்ற வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது, நான் உரையாற்றிய அறிக்கையில், தமிழ்நாடு அரசு பொறுப்புறுதி அளித்து, இந்தியன் வங்கியிடம் ரூ. 5 கோடி கடன் பெற்று, இவ்வாண்டு 100 டிராக்டர்களும், 10 புல்டோசர்களும், தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் மூலமாக, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமென்று அறிவித்ததற்கு மாறாக, சம்பந்தப்பட்ட எல்லா விவரங்களையும் கருத்தில் கொண்டு, 1990-91 ஆம் ஆண்டிற்குத் தமிழ்நாடு அரசு பொறுப்புறுதி அளித்து, இந்தியன் வங்கியிடம் ரூ. 5 கோடி கடன் பெற்று, 30 புல்டோசர்கள் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் மூலமாக வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வழங்கலாம் என்று அரசு முடிவு எடுத்துள்ளது என்று அந்தத் திருத்தத்தை நான் இங்கே அறிவிக்கிறேன்.''

5. கவன ஈர்ப்பு.

(அ) திருப்பூர் பகுதியிலுள்ள பனியன் தொழிற்சாலைகளிருந்து வெளியேறும் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு குறித்து.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருப்பூர் பகுதியில் பனியன் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

திருப்பூர் நகர வளர்ச்சித் திட்டப் பகுதியில் 162 சலவைப் பட்டறைகளும் (Bleaching Industries) 150 சாயப் பட்டறைகளும் (Dying Industries) நிறுவப்பட்டுள்ளன.